**<u>பயிற்சிகள்.</u>**

வணக்கம் மாணவர்களே,

பாடப் புத்தகத்தில் பக்கம் **129** இல் காணப்படும் தொகாநிலைத் தொடர்களை அறிதல். தொடர்ந்து, பக்கம் **129** இல் காணப்படும் இடுபணி ஒன்றையும் பக்கம் **130** இல் காணப்படும் இடுபணி மூன்றையும், வளப்படுத்துதல் பயிற்சியையும் குறைநீக்கல் பயிற்சியையும் செய்தல். உங்கள் விடைகளை எழுதி தொலைவரியில் அனுப்பவும். இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) ஞாயிறு இரவு **8** மணியளவில் அல்லது திங்கள் இரவு **8** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

பாடம் 4 **இலக்கணம்**

தொகுதி 13

## தொகாநிலைத் தொடர்

**தொகாநிலைத் தொடர்கள் என்றால் என்ன?**

- சொற்றொடரில் உருபுகளோ சொற்களோ மறையாமல் வெளிப்படையாக இருந்து பொருள் தருமாயின் தொகாநிலைத் தொடர் எனப்படும்.
- தொகாநிலைத் தொடர் ஒன்பது வகைப்படும். அவற்றுள் எழுவாய்த்தொடர் மற்றும் விளித்தொடர் ஆகியவை உள்ளடங்கும்.
- எழுவாய்த்தொடர்: (எ.கா: சேவல் கூவியது)
  எழுவாயைத் தொடர்ந்து பயனிலை வரும் தொடர் 'எழுவாய்த்தொடர்' எனப்படும்.
- விளித்தொடர்: (எ.கா: கண்ணா வா!)
  ஒருவரை அழைத்தற்பொருட்டு விளிக்குந்தொடர் விளித்தொடர் எனப்படும்.
  அவ்வாறு விளியேற்கும் போது பெயர்ச்சொல்லின் கடை நீண்டு ஒலிக்கும்.

இடுபணி 1

**கீழ்க்காணும் தொகாநிலைத் தொடர்களை ஆய்ந்து வகைப்படுத்துக.**

புலி பாய்ந்தது தென்றலே வா! சொல் மன்னா! மழை பெய்யுமா?
பாரதி கவிஞர் தெய்வமே பார்! குழந்தாய் வா!
குரங்கு தாவியது அன்பு தெரியுமா? குயில் கூவியது
வா தம்பி! மாடுகள் ஓடின

| எழுவாய்த் தொடர் | விளித்தொடர் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

5.7.6 தொகாநிலைத்தொடரில் எழுவாய்த்தொடர், விளித்தொடர் ஆகியவற்றை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**கீழ்க்காணும் தொகாநிலைத் தொடர்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| கலைவாணி வா! | குழந்தை அழுதது | ஓவியர் ஓடினார் | வாரும் நண்பரே! |
| நிலவு தோன்றுமா? | அம்மா அமர்க! | அவர்தாம் நண்பர் | உலகம் வியக்கும் |

## இடுபணி 3

**வினாக்களுக்கு விடை கூறுக; எழுதுக.**

1. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன? விளக்கி எழுதுக.
2. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?
3. எழுவாய்த்தொடர், விளித்தொடர் ஆகியவற்றின் வேறுபாடு என்ன? வகைக்கு மூன்று எடுத்துக்காட்டுகளைத் தருக.

## வளப்படுத்துதல்

**கீழ்க்காணும் வாக்கியங்களில் காணப்படும் தொகாநிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுவாய்த்தொடர், விளித்தொடர் என வகைப்படுத்தி எழுதுக.**

1. தமிழரின் இனவுணர்வைத் தட்டியெழுப்ப எழுச்சிக் கவிதைகளைப் பலர் எழுதினர்.
2. தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் தமிழ்ச்சுவடிகள் கிடைக்குமா எனத் தேடி அலைந்தார்.
3. "புலவரே வருக! அருங்கவி தருக." எனக் கபிலரை அன்பொழுக வரவேற்றான் மன்னன் பாரி.
4. "சிறுத்தையே வா! இனம் நலம் காக்க" என்று இளைஞரை எழுச்சியோடு அழைத்தார் பாவேந்தர்.
5. தமிழே உலகின் தாய்மொழி என்பதைத் தம் ஆய்வின் வழி கார்டுவெல் நிறுவினார்.

## குறைநீக்கல்

**வாக்கியங்களைத் தொகாநிலைத் தொடர்களைக் கொண்டு நிறைவு செய்க. கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்துக.**

1. திருடன் பூட்டை உடைத்து நுழைவதைக் கண்டு ________ ________.
2. "________ ________!" என்று வரவேற்றார் அமைச்சர்.
3. குழந்தையைத் தூங்க வைக்க ________ ________.
4. "________ ________!" என்று இறைவனை வேண்டினார் பாட்டி.
5. கடும் மழை பெய்ததால் ________ ________ என மக்கள் பயந்தனர்.

புலவரே | நாய்கள் | வாருங்கள் | அம்மா | இறைவா | பாடினார் | ஏற்படுமோ | குரைத்தன | வெள்ளம் | காப்பாற்று